# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் புதூஹ் பள்ளிவாயிலில்
## 25.01.2013 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தசஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் கூறினார்கள்:**

இந்தக் காலத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது மகிமையையும், தகுதியையும் உலகில் நிலைநாட்டுவதற்காக அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை அனுப்பினான்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

இறைவன் தனது தூதர் நபி கரீம் (ஸல்) அவர்களது உண்மைக்கான ஆதாரங்களை நிறைவடையச் செய்வதில் எந்தக் குறையும் வைக்கவில்லை. அவர்கள் ஒரு சூரியனைப் போன்று தோன்றினார்கள். எல்லா வகையிலும் அவர்கள் தமது ஒளியை வெளிப்படுத்திக் காட்டினார்கள். எவர் இந்த உண்மையான சூரியனை விட்டும் தமது முகத்தை திருப்பிக் கொள்கின்றாரோ அவருக்கு, அது நல்லதல்ல. அவரை நல்லெண்ணம் கொண்டவர் என்று நாம் கூற முடியாது.

ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்கள்கூறுகின்றார்கள்: நினைவில் கொள்ளுங்கள்! ஏகத்துவத்தின் தாயாக நபி தான் இருக்கின்றார். அவர் மூலம் ஏகத்துவம் பிறக்கின்றது. அதன் மூலம் இறைவனின் இருப்பு பற்றி தெரிய வருகிறது.

ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: அத்தாட்சிகளை நிறைவடையச் செய்வதைப் பற்றி இறைவனை விட அதிகமாக யார் அறிந்திருக்க முடியும்? அவன் தனது நபி கரீம் (ஸல்) அவர்களது உண்மையை நிரூபித்துக் காட்டுவதற்காக விண்ணையும், மண்ணையும் அடையாளங்களால் நிரப்பி விட்டான். இப்போது இந்த காலத்திலும் இறைவனது ஊழியனாக இருக்கின்ற இந்த எளியவனை அனுப்பி, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது உண்மையை நிரூபிப்பதற்காக ஆயிரக்கணக்கான அடையாளங்களை வெளிப்படுத்தியுள்ளான். அவை மழை போன்று பொழிகின்றன. பிறகு அத்தாட்சிகள் நிறைவடைவதில் என்ன குறை இருக்க முடியும்?

இந்த அடையாளங்கள் பல்வேறு வடிவில் இன்றும் வெளிப்பட்டுக் கொண்டிருந்தாலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடமிருந்து நேரடியாக அருள்களைப் பெற்ற பின்னவர்களின் அந்த ஜமாஅத்திற்கு அல்லாஹ் வழிகாட்டினான். அவர்களுக்கு அடையாளங்களைக் காட்டினான். கனவுகள் மூலமாக சரியான நேர்வழியில் அவர்களை செலுத்தினான். பிறகு அவர்கள், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் பைஅத் செய்வதற்காக எல்லா விதமான தியாகங்களையும் செய்தனர். அவர்களில் சிலருக்கு அல்லாஹ், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களையும், அவர்களது உண்மைப் பேரன்பரையும் ஒரே உயிரின் வடிவில் இருப்பதைக் காட்டினான். எனது இந்தத் தொடரில் இன்றும் நான் அப்படிப்பட்ட மக்களது சில கனவுகளை எடுத்துக் கூறுவேன். அவர்களுக்கு பல வகையில் அல்லாஹ் வழிகாட்டியுள்ளான். அவர்களில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை கனவில் கண்டவர்களும் உள்ளனர். அதில் அவர்கள் தனது மஸீஹ் தொடர்பாக அவர்களின் உயர் தகுதி என்ன என்பதைப் பற்றியும், அல்லாஹ்வின் இந்த பயில்வான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது மார்க்கத்தைப் பரப்புவதற்காக இந்தக் காலத்தில் எவ்வாறு பணியாற்றினார்? என்பதைப் பற்றி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியிருந்தார்கள். அவற்றில் சில உதாரணங்களை உங்கள் முன் எடுத்துக் கூறுகின்றேன்.

**மிர்ஸா முஹம்மது ஜலாலுத்தீன் சாஹிப் அவர்களது மகன் மிர்ஸா முஹம்மது அஃப்ஸல் சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்:**

இவர்கள் பைஅத் செய்த வருடம் 1895 ஆகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை 1904 ஆம் ஆண்டில் இவர்கள் நேரடியாக சந்தித்து அவர்களது கையில் பைஅத் செய்தார்கள்.

மிர்ஸா முஹம்மது அஃப்ஸல் சாஹிப் கூறுகின்றார்கள்: ஏறக்குறைய கி.பி. 1876 ஆம் ஆண்டில் அல்லது அதற்கு முன்னரோ பின்னரோ எனது தந்தை முன்ஷி முஹம்மது ஜலாலுத்தீன் சாஹிப் அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நஸேரா சாவடியில் தங்கியிருந்த காலக்கட்டத்தில் அவர்களுடன் இருந்த ஆரம்ப கால பத்ர் சஹாபாக்களில் ஒருவராக இருந்தார். மஸீஹ் தொடர்பாகவும் அவருக்கு, 313 சஹாபாக்கள் இருப்பார்கள் என்று கூறப்பட்டுள்ளது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களும் பல்வேறு இடங்களிலும் தமது நூல்களான ஆயினேயே கமாலாத்தே இஸ்லாம் மற்றும் அஞ்சாமே ஆத்தம் ஆகியவற்றில் இந்த 313 சஹாபாக்களைக் குறிப்பிட்டுக் கூறியுள்ளார்கள். நபிமொழியில் குறிப்பிட்டிருப்பதற்கிணங்க அவர்களை பத்ர் சஹாபாக்கள் என்று அழைத்துள்ளார்கள். அவர்களில் மிர்ஸா முஹம்மது அப்ஸல் சாஹிப் அவர்களின் தந்தையாராக மிர்ஸா முன்ஷி ஜலாலுத்தீன் சாஹிபும் ஒருவராவார்.

அறிவிப்பாளர் கூறுகின்றார்: எனது தந்தையார் நஸேரா சாவடியில் தங்கியிருந்த சமயத்தில் தொடர்ந்து மூன்று நாட்கள் கண்ட ஒரு நற்செய்தி அடங்கிய கனவின் அடிப்படையில், சிறு பையனாக இருந்த என்னை தனது நண்பர் ஒருவரிடம் ஒப்படைத்து விட்டு என்னைப் பிரிந்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஹ்தியைத் தேடிச் சென்றார்கள். ஜிஹ்லம் என்ற இடத்தில் வைத்து அவர்களுக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது ஒரு நூல் தொடர்பான பிரசுரம் கிடைத்தது. அதைப் படித்து விட்டு தனது நோக்கம் நிறைவேறும் இலக்கை நோக்கி அவர்கள் செல்ல ஆரம்பித்தார்கள். காதியான் எவராலும் அறியப்படாத ஒரு கிராமமாக இருந்தது. மிகவும் சிரமப்பட்டு அவர்கள் பட்டாலா வந்து சேர்ந்தார்கள். அங்கு ஒருவர் அவர்களை தடுத்து நிறுத்தி விட்டார் அல்லது அவரது உள்ளத்தில் தீயதைப் புகுத்தி விட்டார். அதன் விளைவாக அவர்கள் அங்கிருந்து திரும்பிச் சென்று விட்டார்கள். அவர்கள் இராணுவத்தில் பணியாற்றியதால் அதற்குப் பிறகு அவர்கள் காபூல் போரில் கலந்து கொள்ள சென்று விட்டார்கள்.

அங்கிருந்து திரும்பி வந்த சமயத்தில், வெட்க உணர்வுடைய உள்ளத்துடன் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது சமூகத்தில் ஆஜரானார்கள். ஹஸ்ரத் சாஹிப் அவர்கள் அவர்களைப் பார்த்ததுமே காபூலிலிருந்து எனக்கு வந்த கடிதங்களை எழுதிய அதே முன்ஷி ஜலாலுத்தீன் சாஹிப், நீங்கள்தானே? என்று கேட்டார்கள். இவர்களுக்கு அல்லாஹ் பலமுறை வழிகாட்டியிருந்தான். ஆனால் அவ்வாறிருந்தும், எதிரிகள் இவர்களை வழிகெடுத்துக் கொண்டிருந்ததால் அவர்கள் நல்லெண்ணத்துடன் இதற்காக புறப்பட்டு வந்த சமயத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொள்வதற்கான நல்வாய்ப்பு இவர்களுக்கு கிடைக்கவில்லை. ஆனால் எவ்வாறிருப்பினும், இவருக்கு நல்லெண்ணம் இருந்தது. அதனால் அல்லாஹ் இவர்களுக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொள்ளும் சந்தர்ப்பத்தை வழங்கினான்.

**முஹம்மது இஸ்மாயீல் சாஹிப் அவர்களது மகனான புக் பைண்டர் ஹஸ்ரத் முஹம்மது அப்துல்லாஹ் சாஹிப்.** இவர் பைஅத் செய்த வருடம் 1902 ஆகும். இவர் 1902 ஆம் ஆண்டு மே மாதத்தில் பைஅத் செய்தார். 1903 ஆம் ஆண்டு இவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைச் சந்தித்தார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: எனக்கு கிடைத்ததெல்லாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது துஆக்களின் விளைவுகளே ஆகும். நான் எனது சிறு வயதிலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது அருளுக்குரிய உருவத்தைக் கனவில் பார்த்துள்ளேன். கனவில் நான் பறவைகள் போன்று பறப்பதைப் பார்த்தேன். கிழக்குத் திசையின் பக்கம் பறக்கின்றேன். முன்னே சென்று ஒரு பெரியவரைப் பார்த்தேன். அவரது தாடி மற்றும் தலையில் இருந்த முடிகளுக்கு மருதாணி மூலம் நிறம் பூசப்பட்டிருந்தது. 1903 ஆம் ஆண்டு வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது சமூகத்தில் வந்த போது சிறு வயதில் நான் பறந்து சென்ற சமயத்தில் நான் கண்ட அந்தப் பெரியவரின் தோற்றம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது தோற்றமாக இருந்தது.

**ஹஸ்ரத் ரஹ்மத்துல்லாஹ் சாஹிப் அவர்கள்** கடிதம் மூலமாக 1901 ஆம் ஆண்டு பைஅத் செய்திருந்தார். அவர்கள் கூறுகின்றார்கள்:

ஒருமுறை ஆண்டு மாநாடு நடக்கும் நாட்கள் அருகில் வந்து கொண்டிருந்தன. இந்த எளியவன் துஆவும் இஸ்திகாராவும் செய்திருந்தேன். அப்போது எனது சிற்றுறக்கத்தின் போது சில தடவைகள் நாவில்

இந்த சொற்கள் வந்தன. இளைஞர்களே! முயற்சி செய்து மார்க்கத்தில் ஆற்றலை உருவாக்குங்கள் என்பதே அந்த சொற்களாகும். அதாவது மார்க்கத்திற்கு தொண்டு செய்வதன் பக்கம் கவனம் செலுத்துங்கள் என்பதையே அது உணர்த்தியது.

ஹஸ்ரத் ரஹ்மத்துல்லாஹ் சாஹிப் கூறுகின்றார்கள்: இன்று இந்த ஆண்டு மாநாட்டில் ஹுஸூர் அவர்கள் இருக்கும்போது இறைவனது அருளால் நான் எனது சகோதரர்களுடன் அவர்களிடத்தில் இருந்தேன். அல்ஹம்துலில்லாஹ்!

**ஹஸ்ரத் கான் அமீருல்லாஹ் கான் சாஹிப் அவர்கள்** கடிதம் மூலம் 1904 ஆம் ஆண்டு பைஅத் செய்தார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை 1905 ஆம் ஆண்டு அல்லது 1906 ஆம் ஆண்டு சந்தித்தார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைச் சந்திக்க காதியான் செல்லாத சமயத்தில் கனவில் கண்ட விசயங்களைக் கூறுகின்றேன்.

பகல் பொழுதில் நான் கனவில் மூன்று அஹ்மதிகளாகிய நாங்கள் ஒன்றாக இருப்பதைப் பார்த்தோம். அவர்களில் ஒருவன் இந்த எளியவனாவேன். இரண்டாமர் அமீருல்லாஹ் அஹ்மதியாவார். மூன்றாவது நபர் மர்ஹூம் பாபு ஆலம்கீர் சாஹிப் அவர்கள் ஆவார்கள். இவர்களைத் தவிர லாஹூரி பிரிவைச் சேர்ந்த திலாவர் கான் சாஹிபும் இருந்தார். தெற்குத் திசையை நோக்கி நாங்கள் வரிசையாக நின்று கொண்டிருந்தோம். எங்களுக்கு முன்னால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களும் முதலாவது கலீஃபாவான நூருத்தீன் அவர்களும் வடக்கு திசையை நோக்கி நிற்கின்றனர். அப்போது மஹ்தி (அலை) அவர்கள் தமது கையை நீட்டி எனது நெஞ்சத்தின் பக்கம் விரலால் சுட்டிக் காட்டியவாறு ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களிடம் இவர் சுவர்க்கத்திற்குரியவர் ஆவார் என்று கூறினார்கள். பிறகு இரண்டாவது நபரை சுட்டிக்காட்டி இதையே கூறினார்கள். பிறகு மூன்றாவது நபர் தொடர்பாக எதுவும் கூறவில்லை. நான் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களையே வைத்த கண் நீங்காமல் பார்த்துக் கொண்டிருந்ததால் மற்ற இரண்டு அஹ்மதிகளில் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எவர்களை சுட்டிக் காட்டி இந்த விசயத்தைக் கூறினார்கள் என்பதை என்னால் பிரித்தறிந்து கூற முடியவில்லை. பிறகு இந்தக் காட்சி திடீரென்று மாறியது. பிறகு நான் பார்த்தேன். இந்த எளியவன், மவ்லவி அதாவுல்லாஹ் மர்ஹூம், ஆலம்கீர் கான், பைஅத் செய்யாத திலாவர் கான் ஆகிய நால்வரும் ரொட்டி சாப்பிடுவதற்காக அமர்வது போன்று ஒன்றாக அமர்ந்திருக்கின்றோம். நாங்கள் நால்வரும் பேசிக் கொள்கின்றோம். அவர்களில் ஒருவர் தன்னை பருந்து என்று கூறுகின்றார். இன்னொருவர் தன்னை புறா என்று கூறுகின்றார். இன்னொருவர் தன்னை கௌதாரி என்று கூறுகின்றார். இந்த தருணத்தில் முதல் கலீஃபா அங்கு வந்தார்கள். நீங்கள் பருந்தாகவும், புறாவாகவும், கௌதாரியாகவும் ஆவதற்காக பிறக்கவில்லை. லாயிலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் என்று கூறுங்கள் என்று அவர்கள் கூறினார்கள். அதைக் கேட்டு நான் கலிமா சொல்ல ஆரம்பித்தேன். மூன்றாவது முறையாக நான் கலிமா கூறிய போது கனவிலிருந்து விழித்தெழுந்தேன். அது ளுஹர் நேரமாக இருந்தது. சுவரின் நிழல் ஒரு கை அளவு இருந்தது. அடுத்த வருடம் நான் காதியான் சென்ற போது, கனவில் கண்ட அதே வடிவில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களையும் முதல் கலீஃபா அவர்களையும் பார்த்தேன். அல்ஹம்துலில்லாஹ்!

தமது இன்னொரு கனவைக் கூறுகின்றார்: காதியானில் வைத்து ஹஸ்ரத் முதல் கலீஃபா (ரலி) அவர்களது கிலாஃபத்தின் காலத்தில் ஹகீமுல் உம்மத் ஹஸ்ரத் முதல் கலீஃபா (ரலி), மர்ஹூம் டாக்டர் கலீஃபா ரஸீதுத்தீன் சாஹிப், டாக்டர் மிர்ஸா யாகூப் பேக் சாஹிப், மேலும் இன்னும் இரண்டு அஹ்மதி டாக்டர்கள் ஆகியோரது சிகிச்சையின் கீழ் 22 நாட்கள் இருந்தேன். அவர்கள் என்னை பரிசோதித்து விட்டு நான் அறுவை சிகிச்சை செய்து கொள்ள வேண்டும் என்று ஆலோசணை கூறினர். நான் மகிழ்ச்சியடைந்தேன்.

இரவில் விருந்தகத்தில் நான் தங்கியிருந்த அறையில் எனது தலைக்குப் பக்கத்தில் நின்றவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு கூறினார்கள். (இவர்கள் இரவில் தான் கண்ட கனவைக் கூறுகின்றார்கள்.) ஹஸ்ரத் சாஹிப் அவர்கள், அறுவை சிகிச்சை வேண்டாம். இது பிளேக் நோயாகும் என்று கூறினார்கள். பிறகு இதன் விளக்கத்தையும் எனக்கு புரிய வைத்தார்கள். அதாவது பிளேக் நோய் என்பதன்

பொருள் மரணமாகும் என்றார்கள். நான் காலையில் இந்தக் கனவை முதல் கலீஃபா அவர்களிடம் கூறினேன். அதற்கு ஹஸ்ரத் முதல் கலீஃபா அவர்கள், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியது சரிதான். அறுவை சிகிச்சை வேண்டாம் என்று கூறினார்கள்.

இவர் தமது மூன்றாவது கனவு ஒன்றையும் கூறுகின்றார்கள்: நான் எனது வீட்டில் வைத்து கனவு பார்த்தேன். அதாவது அடுத்த நாள் ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்வதற்காக செல்ல எண்ணுகின்றேன். அப்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் என்னிடம் ஹாமித் அலி அவர்களையும் கவனித்துக் கொள்ள வேண்டும் என்று கூறுகின்றார்கள். பிறகு ஆண்டு மாநாட்டின் போது நான் காதியான் சென்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது ஊழியரான ஹாமிது அலி அவர்களிடம் ஒரு ரூபாய் கொடுத்தேன்.

இது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வஃபாத் ஆன பிறகு நடந்த சம்பவத்தை கூறுகின்றார்.

அவர் கூறுகின்றார்: நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது ஊழியரான ஹாமிது அலி அவர்களுக்கு ஹாமிது அலியையும் கவனித்துக் கொள்ளுங்கள் என்று கனவில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எனக்கு கட்டளையிட்டுள்ளார்கள். எனவே, ஒரு ரூபாயை நான் உங்களுக்கு வழங்குகின்றேன் என்று எழுதிக் கொடுத்தேன்.

இதைக் கேட்டு ஹாமிது அலி சாஹிப் அவர்கள் அழுதார்கள். பிறகு கூறினார்கள்: நபிமார்கள் எந்த அளவு கருணை காட்டுபவர்களாகவும் பரிவுடன் நடப்பவர்களாகவும் உள்ளனர். தனது ஊழியரைப் பற்றியும் அவர்களுக்கு கவலை இருக்கின்றது. அவ்வாறிருக்கும் போது தமது அன்பான மகன்கள் தொடர்பாக அவர்களுக்கு கவலை இல்லாமல் இருக்குமா?

லாஹுரில் வெட்கங்கெட்ட நபர் ஒருவரும், அவருடைய கருத்துக்கு ஒத்துப்போகின்ற மற்றவர்களும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது குடும்பத்தினர் மீது தகாத தாக்குதல்களைத் தொடுத்துள்ளனர்.

இவ்வாறு கனவில் பைஅத் செய்யாமல் பிரிந்து சென்றுவிட்ட லாஹுரிகள் தொடர்பாகவும் கூறுகின்றார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு தமது மகன்கள் தொடர்பாக கவலை இல்லாமல் இருக்குமா? என்பதில் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் தொடர்பாகவே சைகையாக சுட்டிக் காட்டுகின்றார்கள். ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹின் கிலாஃபத்தின் சமயத்தில் மிகப்பெரும் குழப்பம் நிலவியது. இதன் மூலமாக மேலும் இவர்களுக்கு போதுமான அளவு நிச்சய உறுதி ஏற்பட்டது.

**<u>ஹஸ்ரத் மியான் மீரான் பக்ஷ் சாஹிப்</u>** தையல் மாஸ்டர் அவர்கள் 1900 ஆம் ஆண்டில் பைஅத் செய்தார். அவர்கள் கூறுகின்றார்கள்:

பைஅத் செய்ய நாடியது எவ்வாறென்றால், எங்களது சகோதரரான குலாம் ரஸுல் சாஹிப் அவர்கள் எங்களுக்கு முன்னதாகவே அஹ்மதியாகி இருந்தார். ஆனால் அவர் படிப்பறிவற்றவராக இருந்தார். நான் கடையிலிருந்து எனது வீட்டின் பக்கம் செல்லும் போது வழியில் அவர்களை சந்தித்து வந்தேன். அவர்களுடன் ஜமாஅத் தொடர்பாக பேசுவேன். நான் எதிர்த்து வந்ததால் அவர்களைப் பொய்யர் என்று கூறி வந்தேன். ஆனால் வீட்டிற்கு வந்து நான் சிந்திக்கும் போது இவர் படிக்காதவராக இருந்தாலும் கூட இவர் கூறும் விசயங்களுக்கு யாரும் பதில் கூற முடியாது என்று எனது நஃப்ஸ் கூறியது. ஒருநாள், எனது சகோதரர் எனக்கு சில பிரசுரங்களை வழங்கினார். அவற்றை நான் படித்த போது அதன் ஆழமான தாக்கம் அதிகமாக என் மீது ஏற்பட்டது. அதனால் நான் இறைவன் முன்னிலையில் துஆ செய்ய ஆரம்பித்தேன். பிறகு நான் ஓர் இரவு கனவில் பார்த்தேன். நான் கட்டிலிலிருந்து எழுந்து சிறுநீர் கழிப்பதற்காக செல்கின்றேன். அப்போது ஜன்னல் திறந்திருப்பதை நான் பார்த்தேன். இந்த ஜன்னல் ஏன் திறந்துள்ளது? என்று நான் வியந்தேன். நான் ஜன்னலின் பக்கம் சென்ற போது ஒரு பெரியவர் கையில் ஒரு புத்தகத்தை ஏந்தியவாறு அதைப் படித்துக் கொண்டிருப்பதைப் பார்த்தேன். நீங்கள் படிப்பது எந்த நூல்? என்று நான் அவரிடம் கேட்டேன். அப்போது இது மிர்ஸா சாஹிபின் நூல் ஆகும். நாம் உனக்காகவே இதைக் கொண்டு வந்துள்ளோம் என்று அவர் கூறினார். அந்த நூலை அவர் என்னிடம் தந்த போது அதன் எழுத்துக்கள் சிறிய வடிவில் அச்சிடப்பட்டிருந்தது. நான் இவர்களது பிரசுரத்தைப் பார்த்துள்ளேன். அது பெரிய அளவில் உள்ளதாகும். அதற்கு அந்தப் பெரியவர் மிர்ஸா சாஹிப் இந்த நூலை சிறிய வடிவில்

வெளியிட்டுள்ளார்கள் என்று கூறினார். இதற்குப் பிறகு எனது கண்கள் திறந்தன. இரவில் நான் துஆ செய்து விட்டு இதே எண்ணங்களுடன் உறங்கியதால் அதன் தாக்கம் தான் என்னிடம் ஏற்பட்டுள்ளது என்று எண்ணினேன். ஆனால், நான் ளுஹர் தொழுவதற்காக எனது வீட்டிற்கு வந்து கொண்டிருந்த போது குலாம் ரஸூல் அவர்களது கடையில் அமர்ந்தவாறு ஒரு நபர் ஒரு புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தார். நீங்கள் எந்த நூலைப் படிக்கின்றீர்கள்? என்று நான் அவரிடம் கேட்டதும் மியான் குலாம் ரஸூல் சாஹிப் அவர்கள் அந்த நூலை அவர்களிடமிருந்து வாங்கி எனது கைகளில் தந்து விட்டு நீங்கள் எந்த புத்தகத்தைக் கேட்டீர்களோ அதனை நான் உங்களுக்காகவே கொண்டு வந்துள்ளேன். இதை நீங்கள் பெற்றுக் கொள்ளுங்கள் என்று கூறினார். நான் அந்த நூலைப் பார்த்து விட்டு இந்த நூல் கடந்த இரவில் கனவில் எனக்கு கிடைத்தது என்று கூறினேன். பிறகு நான் இஸாலே அவ்ஹாம் என்ற நூலின் இரண்டு பாகங்களையும் கவனமாகப் படித்தேன். இப்போதும் உனக்கு ஏதாவது சந்தேகம் எஞ்சியிருக்கின்றதா? என்று நான் எனது உள்ளத்திடம் கேட்டேன். அதற்கு இப்போது எந்த சந்தேகமும் எஞ்சியிருக்கவில்லை என்று எனது உள்ளம் பதில் கூறியது. பிறகு நான் பைஅத்திற்கான கடிதத்தை எழுதி விட்டேன். அதாவது சில மணி நேரத்தில் இவர் கண்ட கனவும் நிறைவேறியது. பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பைஅத் செய்வதற்கான நல்வாய்ப்பையும் அல்லாஹ் இவர்களுக்கு வழங்கினான்.

**ஹஸ்ரத் நூர் முஹம்மது சாஹிபின் மகன் ஹஸ்ரத் முஹம்மது பாஸில் சாஹிப் அவர்கள்** 1899 ஆம் ஆண்டு பைஅத் செய்தார். இவர்கள் கூறுகின்றார்கள்:

ஒருநாள் நான் வீட்டில் இருந்தேன். எனது மனைவியின் சகோதரரான மவ்லவி சேக் முஹம்மது அவர்கள் என்னிடம் வந்து ஒரு சிறு நூலை எனக்கு தந்தார். அதன் பெயர் சஹாதத்துல் குர்ஆன் அலா நுஸூலில் மஸீஹில் மவ்வூது ஃபி ஆஹிரிஸ் ஸமான் ஆகும். அப்போது இரவு நேரமாக இருந்தது. நான் இதைப் படிப்பதற்காக பகல்பொழுது எப்போது வரும் என எனக்கு ஆர்வம் ஏற்பட்டது. விடியற்காலையில் தொழுது விட்டு ஒரு தனி அறையில் கட்டிலில் படுத்தவாறு அந்த சிறு நூலைப் படிக்க ஆரம்பித்தேன். மூன்று பக்கங்கள் நான் படித்திருப்பேன். அப்போது எனக்கு சிற்றுறக்கம் ஏற்பட்டது. அப்போது நான் என்ன பார்த்தேன்? எனக்கு தலைக்குப் பக்கத்தில் அதே கட்டிலில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வந்து அமர்ந்தார்கள். பிறகு தனது நாவிலிருந்து அருளுக்குரிய எச்சிலை எடுத்து தமது கைகளால் எனது வாயில் போட்டார்கள். அவற்றை தண்ணீர் துளிகளை விழுங்குவதுபோல் நான் விழுங்கி விடுகின்றேன். எனது உள்ளத்திலிருந்து நீரூற்றுகள் வெளிப்படுவது போன்று எனக்கு தோன்றியது. மேலும் ஆனந்தத்தால் நெஞ்சம் நிரம்பி விட்டது. பிறகு நான் கண் விழித்தேன். எனது உள்ளத்தில் அதிகமாக உறுதி ஏற்பட்டது. அன்பின் நெருப்பும் வேகமாக எரிந்தது. எனது உள்ளத்திலிருந்து அமைதியின்மையும் அகன்று விட்டது. பிறகு எங்கு நான் சென்றாலும் எனது நாவில் இந்தக் கவதை வரிகளே இருந்தன.

*அன்பரே!*
*நான் முற்றிலும்*
*உமது பைத்தியமாகவே*
*ஒவ்வொரு நகரத்திலும்*
*ஒவ்வொரு ஊரிலும்*
*திரிகின்றேன்.*

இவர் கூறிய அந்த நூல் சஹாதத்துல் குர்ஆன் ஆகும். ஆட்சேபணை செய்த ஒருவர் ஹதீஸ்களின் ஒளியில் நீங்கள் உண்மையாளர் என்பது எப்படி நிரூபணமாகும்? ஏனென்றால், ஹதீஸ்கள் மீது உறுதி கொள்ளும் அளவில் நம்பத்தகுந்தவையாக இல்லை என்று ஆட்சேபணை செய்திருந்தார். அதற்கு விளக்கம் தரும் வகையில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இந்த நூலை எழுதினார்கள். மேலும் எல்லா சந்தேகங்களையும் அகற்றினார்கள். ஆட்சேபணை செய்த நபருக்கு இதன் மூலம் திருப்தி ஏற்படவில்லை. எவ்வாறிருப்பினும், இந்த நூல் பலருக்கும் பயன்தரக்கூடியதாக இருக்கிறது.

நிலக்கிழாராக இருந்த **ஹஸ்ரத் சேக் அதா முஹம்மது சாஹிப் அவர்கள்** அறிவிக்கின்றார்கள்:

கனவில் ஹுஸூர் (அலை) அவர்கள் தஹ்ஸீலுக்கு முன்னால் இருக்கின்ற பட்டாலாவிலுள்ள ரோட்டில் உலாவிக் கொண்டிருக்கின்றார்கள். ஹுஸூர் எனக்கு ஒரு ரூபாயை வழங்கினார்கள். அதிலிருந்த ராணியின்

உருவத்தின் மீது X (Cross) போட்டார்கள். அதாவது அந்த உருவத்தின் மீது கோடிட்டு விட்டு இதனை கருவூலத்தில் சேர்த்து விட்டு வாருங்கள் என்றார்கள். இந்தக் கனவு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் கூறப்பட்டது. அதைக் கேட்ட ஹுஸூர் அவர்கள் ராணி முஸ்லிம் ஆகமாட்டார் என்று கூறினார்கள்.

முகல் சாஹிப் என்றழைக்கப்பட்ட **மியான் அப்துல் அஸீஸ் சாஹிப்** அவர்கள் 1892 ஆம் ஆண்டு பைஅத் செய்தார்கள். இவர்கள் அறிவிக்கின்றார்கள்:

சவுத்ரி அப்துர் ரஹீம் சாஹிப் அவர்கள் அஹ்மதி அல்லாதவராக இருக்கும் நிலையிலேயே ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்களது கடிகாரம் பழுது பார்க்கப்படுவதற்காக தன்னிடம் வந்திருப்பதைக் கனவில் பார்த்தார்கள். தற்செயலாக நான் ஒரு கடிகாரத்தை சரி செய்வதற்காக அவரிடம் கொடுத்தேன். இது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது கடிகாரமாகும். ஹஸ்ரத் அம்மா ஜான் அவர்கள் இதனை அவர்களுக்கு வழங்கியிருந்தார்கள். கனவு கண்ட அந்த நபர் அஹ்மதி அல்லாதவராவார். அப்போது அவர் அஹ்மதியாகவில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது கடிகாரம் பழுது பார்க்கப்படுவதற்காக தன்னிடம் வந்திருப்பதை அவர் கனவில் பார்க்கின்றார். சிறிது காலம் கழிந்த பிறகு கனவு கண்ட அந்த நபரிடம் முகல் சாஹிப் அவர்கள் ஒரு கடிகாரத்தை பழுது பார்ப்பதற்காகக் கொடுத்தார்கள். அவர்கள் அந்தக் கடிகாரத்தைத் திறந்து பார்த்ததுமே இது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது கடிகாரமாகும். முற்றிலும் கனவில் நான் கண்ட அதே வடிவத்தில் அதை நான் பார்க்கின்றேன் என்று கூறினார்.

**ஹஸ்ரத் அமீர் கான் சாஹிப்** அவர்கள் 1903 ஆம் ஆண்டு பைஅத் செய்தவர் ஆவார்கள். அவர்கள் கூறுகின்றார்கள்:

1902 ஆம் ஆண்டு கனவில், முபாரக் பள்ளிவாசலை ஒரு வட்டமாக இருக்கும் ஒரு கோட்டையின் வடிவத்தில் பார்த்தேன். அதற்குள் அதிகமான மக்கள் இருந்தனர். ஒவ்வொருவரது கையிலும் ஒரு சிவப்பு நிற கொடி இருந்தது. அவர்களில் எல்லாரையும் விட பெரியவராக இருந்த ஒரு நபர் மேல் மாடியில் இருந்தார். அவரது கையில் ஒரு மிகப்பெரிய சிவப்பு நிற கொடி இருந்தது. ஒருவர் என்னிடம் இவர் யார்? என்று உங்களுக்கு தெரியுமா? என்று கேட்டார். எனக்கு தெரியாது என்று நான் கூறினேன். அப்போது அவர் இவர் காபூலிலுள்ள உனது சகோதரர் ஆவார். கோட்டையின் மேல் தளங்களில் எத்தகு ஓட்டைகள் உள்ளன என்றால், அதன் மூலமாக வெளியிலிருக்கும் எதிரிகளை சரியாக குறி வைத்து தாக்க முடியும். ஆனால் வெளியில் உள்ளவர்களுக்கு பார்க்க முடியாததால் அவர்களால் எதையும் குறி வைத்து தாக்க முடியாது. கோட்டைக்கு வெளியே தூசி மற்றும் புழுதியால் எந்த அளவு புகை உள்ளது என்றால், மிகவும் சிரமப்பட்டு தான் மனிதர்களை அடையாளம் கண்டு கொள்ள முடியும். கழுதைகள், கோவேறு கழுதைகள், ஒட்டகங்கள் ஆகியவற்றின் கூச்சல் எந்த அளவுக்கு இருந்ததென்றால் அதன் பீதியின் காரணமாக இதயமே நின்று விடுவது போல் இருந்தது.

கனவை தொடர்ந்து கூறுகின்றார்: நான் கோட்டைக்கு வெளியே வந்ததும் எல்லா பக்கமும் சடலங்கள் கிடப்பதைப் பார்க்கின்றேன். அவற்றை ஒவ்வொருவராக தூக்கிக் கோட்டைக்குள் கொண்டு வந்து கொண்டிருந்தார்கள். கோட்டையை விட்டு சிறிது தூரம் நான் சென்ற பிறகு, கூச்சல் என்னை கவலை அடையச் செய்திருந்த நிலையில் நான் பயந்து கோட்டையின் பக்கம் உடனடியாக திரும்பி வந்தேன். கோட்டைக்குள் நுழைவதற்காக கதவகளை தேடிக் கொண்டிருந்தேன். எனக்கு எந்தக் கதவும் கிடைக்கவில்லை. இவ்வாறு நான் தேடிக் கொண்டிருந்த போது எளிமையான தோற்றத்தில் நற்பண்புகளைக் கொண்ட ஒரு நபரை நான் பார்த்தேன். அவரும் கோட்டைக்குள் நுழைவதற்கே முயற்சி செய்து கொண்டிருந்தார். ஆனால் அவருக்கும் கதவு கிடைக்கவில்லை. இவ்வாறு நாங்கள் தேடிக்கொண்டே இருந்த போது கோட்டைக்கு மேலேயுள்ள கூடாரத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் (எனது தாய் தந்தையர் அவர்களுக்காக அர்ப்பணமாகட்டும்) ஜமாஅத்தான தொழுகையை தொழ வைப்பதைக் கண்டோம். ஜமாஅத்தான தொழுகை அங்கு நடந்து கொண்டிருந்தது. இதைப் பார்த்த நாங்கள் இருவரும் நிம்மதியிழந்த நிலையில் இருந்தோம். இப்படிப்பட்ட அமைதியற்ற நிலையில் நான் எனது மற்ற தோழரின் கழுத்தில் எனது இரு கைகளையும் போட்டவாறு, எனது பீர் ஆன செய்யது குலாம் சா சாஹிப் கூறிய வழிமுறைக்கேற்ப அல்லாஹு என்று திக்ர் செய்ய ஆரம்பித்தேன். அதன் பரக்கத்தால் நாங்கள் இருவரும் பறந்து சென்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது வலப்பக்கத்தில் முதல்

ஸஃப்பில் இரண்டு நபர்கள் மட்டுமே நிற்க வசதியாக காலியாக இருந்த இடத்தில் நின்றவாறு ஸஜ்தாவின் போது தொழுகையில் கலந்து கொண்டோம். ஸஜ்தா செய்யும் போது நான் ஹுஸுர் (அலை) அவர்களுக்கு வலப்பக்கத்தில் நின்று தொழும் வகையில் முதல் ஸஃப்பிலேயே எனக்கு இடம் கிடைத்து விட்ட எனது நற்பாக்கியத்தை நினைத்து எனக்கு எந்த அளவு உருக்கம் ஏற்பட்டு எவ்வளவு வேகத்துடன் அல்லாஹு என்ற திக்ரை நான் செய்தேன் என்றால் இதே நிலையில் நான் கண் விழித்த போது எனக்கு வேகமாக மூச்சு வாங்கியது. கண்களிலிருந்து தாரை தாரையாக கண்ணீர் வழிந்தது. எனக்கு எந்த அளவு மூச்சு வாங்கியது என்றால் அதன் ஓசையைக் கேட்டு வீட்டிலுள்ளவர்களும் எழுந்து விட்டார்கள். என்ன நடந்தது? என்ன நடந்தது? என்று அவர்கள் கேட்டனர். அப்போது அல்லாஹு என்று திக்ரை தொடர்ந்து செய்து கொண்டிருந்தேன். வேகமாக மூச்சு வாங்கிக் கொண்டிருந்தது. இதன் காரணமாக நான் அவர்களுக்கு எந்தப் பதிலையும் கூற முடியவில்லை. எனவே நான் எனது வேகத்தைக் குறைத்துக் கொள்ளவும் அதை திரையிட்டு மறைப்பதற்காகவும் எழுந்து வராண்டாவிற்கு சென்று விட்டேன். பிறகு எனது நிலை சரியானதும் நான் மீண்டும் உள்ளே வந்து கட்டிலில் படுத்தேன். பிறகு இதன் தாக்கம் இருந்தது என்றும், சிறிது காலத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பைஅத் செய்யும் நற்பாக்கியம் கிடைத்தது என்றும் இவர்கள் கூறுகின்றார்கள்.

<u>**ஹஸ்ரத் மியான் முஹம்மது இப்ராஹீம் சாஹிப்**</u> அவர்கள் பிறப்பில் அஹ்மதியாவார். 1903 ஆம் ஆண்டு இவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை சந்திந்தார்கள். அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஹுஸுர் அவர்ள் ஜிஹ்லம் சென்ற சமயத்தில்தான் முதலாவதாக நான் அவர்களைப் பார்த்தேன். அங்கிருந்து திரும்பி வந்த போதும் அவர்களை நான் பார்த்தேன். 1904 ஆம் ஆண்டு லாஹுரில் வைத்து பார்த்தேன். பிறகு 1905 ஆம் ஆண்டு நான் காதியான் சென்றேன். காதியான் செல்வதற்கு முன்பு எனக்கு கனவு வந்தது. அந்தக் கனவில் நான் பார்த்தேன். எனது தந்தையார் வெளியே சென்றிருந்தார்கள். வீட்டில் நானும் எனது தங்கையும் மட்டுமே இருந்தோம். அப்போது இரண்டு நபர்கள் கதவுக்கு அருகில் வருவதைப் பார்த்தேன். அவர்கள் கதவைத் தட்டினர். குரல் கொடுத்து அழைத்தனர். நான் வெளியே வந்து கதவைத் திறந்தேன். அவர்கள் இருவரும் நான் கேட்டுக் கொண்டதற்கிணங்க உள்ளே வந்தனர். எங்களது வீட்டு முற்றத்தில் ஒரு விரிப்பு விரிக்கப்பட்டிருந்ததையும் மூன்று நாற்காலிகள் போடப்பட்டிருப்பதையும் நான் பார்த்தேன். முன்னால் ஒரு மேஜையும் இருந்தது. நான் அந்த இருவரையும் நாற்காலிகளில் அமர்த்தினேன். கனவில் எனது தங்கையிடம் இவர்களுக்காக தேநீர் தயார் செய்யுங்கள் என்று கூறினேன். அவள் விறகுகளை எடுத்து வருவதற்காக மேல் மாடிக்குச் சென்றாள். அந்தக் காலத்தில் கேஸ் போன்றவை இருக்கவில்லை. எரிக்கப் பயன்படும் பொருட்கள் மேல் தளத்தில் போடப்பட்டிருந்தது. அதை எடுப்பதற்காக அவர்கள் சென்றார்கள்.

அறிவிப்பவர் கூறுகின்றார்: அவள் மாடிப்படிகளில் ஏறிக் கொண்டிருந்த சமயத்தில் வாட்ட சாட்டமான கருப்பு நிறத்திலுள்ள ஒரு காளை மாடு உள்ளே நுழைந்தது. அந்த நபர்களை அது பார்த்ததும் உடனடியாகத் திரும்பிச் சென்று விட்டது. பிறகு மாடிப்படிகளில் ஏற ஆரம்பித்தது. எனது தங்கையை அது கொன்று விடும் என்று நான் கூச்சலிட ஆரம்பித்தேன். எனது கூச்சலைக் கேட்டு முதலில் கருப்பு நிற தாடியை உடைய விருந்தாளி எழ ஆரம்பித்தார். ஆனால் சிவப்பு நிறத்திலுள்ள தாடியை உடைய நபர் இந்தப் பணியை நீங்கள் என்னிடம் ஒப்படைத்திருப்பதால் இது எனது பணியாகும் என்று கூறினார். பிறகு அவர் சென்றார். நானும் அவருக்குப் பின்னால் சென்றேன். எனது தங்கை சுவருடன் ஒன்றிவிட்டார். அதனால் உடலில் சிறு கீரல்கள் விழுந்தன. ஆனால் காயம் ஏற்படவில்லை. நாங்கள் மேலே சென்று விட்டோம். காளை மாடு மேற்கிலுள்ள எங்களது சுவருக்கு அருகில் நின்று கொண்டிருந்த சமயத்தில் அதன் தோற்றம் மாறி விட்டது. அது எஞ்சினின் வடிவத்தைப் பெற்று மாறி விட்டது. சுவருக்கு முன்னாலும் பின்னாலும் அது செல்ல ஆரம்பித்தது. சுவரின் இறுதி மூலையை அடைந்ததும் அந்த விருந்தாளி தனது தடியால் அதை அடித்தார். அப்போது அது பின்பக்கம் விழுந்து துண்டு துண்டாகிப் போனது. பிறகு நாங்கள் திரும்பி வந்தோம். அந்த விருந்தாளிகள் மீண்டும் நாற்காலிகளில் அமர்ந்தனர். தேநீர் அருந்தினர். எனக்கும் தேநீர் தந்தனர். தேநீர் அருந்திய பிறகு சிறிது நேரம் வரை அவர்கள் அமர்ந்து என்னுடன் பேசிக் கொண்டிருந்தனர். பிறகு சகோதரரே! எங்களுக்கு நேரம் ஆகிறது. நாங்கள் செல்ல அனுமதி தாருங்கள் என்று அவர்கள் கூறினர். அப்போது நான் நீங்கள் யார்? என்பதைக் கூறுங்களேன்.

அப்போதுதான் எனது தந்தையாரிடம் நான் அதை தெரிவிக்க முடியும் என்றேன். இவ்வாறு நான் கூறியதைக் கேட்டு அவர்கள் இருவரும் லேசாக புன்சிரித்தனர். கருப்பு தாடி வைத்திருந்தவர் எனது பெயர் முஹம்மது ஆகும். இவரது பெயர் அஹ்மது ஆகும் என்று கூறினார். நான் இதைக் கேட்டதும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது கைகளைப் பற்றிக் கொண்டேன். எனக்கு ஏதாவது கூறுங்கள் என்றேன். அவர்கள் அரபி மொழியில் சில சொற்களைக் கூறினார்கள். அது எனது நினைவில் இல்லை. ஆனால் அதன் கருத்து இப்போது எனது மூளையில் பதிந்திருக்கின்றது. அந்த சொற்கள் இவை தான். 'உமது வாழ்க்கையின் இந்த சில நாட்கள் மிகவும் சுகமாக கழியும்' என்றார்கள். பிறகு நான் அவர்களை முஸாபா செய்தேன். உமது தந்தையாருக்கு எமது அஸ்ஸலாமு அலைக்கும் என்று கூறி விடுங்கள் என்று அவர்கள் கூறினார்கள். பிறகு அவர்கள் வெளியே சென்று விட்டார்கள். நான் அவர்களை வழியனுப்பி வைத்தேன். அவர்கள் சென்ற பிறகு கனவிலேயே எனது தந்தையார் அங்கு வந்தார்கள் என்று இவர்கள் கூறுகின்றார்கள். கனவு தொடர்கிறது.

அவர் கூறுகின்றார்: நான் முழு சம்பவத்தையும் தந்தையிடம் கூறினேன். அவர்கள் உடனடியாக வெளியே சென்றார்கள். இதற்குப் பிறகு நான் கண் விழித்தேன். எனது தந்தையார் எழுந்து தொழுங்கள் என்று என்னிடம் கூறினார்கள். இதுவே நான் கண் விழிக்கக் காரணமாக இருந்தது. நான் கண்ட கனவை எனது தந்தையாரிடம் கூறனேன். அன்று ஜுமுஆவின் நாளாக இருந்தது. ஜுமுஆ சமயத்தில் நான் முன்ஷி அஹ்மது தீன் சாஹிபிடம் எனது கனவைக் கூறினேன். அவர்கள் அந்தக் கனவை தாமே எழுதியோ அல்லது என்னிடம் எழுதி வாங்கியோ அதனை ஹஸ்ரத் சாஹிபிற்கு அனுப்பி வைத்தார்கள்.

சில நாட்கள் கழிந்த பிறகு அவர்கள் என்னிடம் ஹஸ்ரத் சாஹிப் அவர்கள் ஆண்டு மாநாட்டின் போது இந்தப் பையனை உங்களுடன் அழைத்து வாருங்கள் என்று கூறியிருந்ததாக கூறினார்கள். ஆண்டு மாநாட்டின் போது நான் சென்றிருந்தேன். நாங்கள் முபாரக் பள்ளிவாசலுக்குச் சென்றதும் இரண்டு அல்லது மூன்று பெரியவர்கள் அங்கு அமர்ந்திருந்தனர். நாங்கள் அவர்களிடம் முஸாபா செய்தோம். பிறகு ஹஸ்ரத் சாஹிப் வந்தார்கள். நாங்கள் எழுந்து நின்றோம். முஸாபா செய்தோம். பிறகு ஹுஸூர் அவர்கள் அமர்ந்தார்கள். முன்ஷி அஹ்மது தீன் சாஹிப் கனவு கண்ட அந்தப் பையன் இவர்தான் என்று கூறினார்கள். இதைக் கேட்டதும் ஹுஸூர் அவர்கள் என்னை தனது மடியில் அமர்த்திக் கொண்டார்கள். பிறகு அந்தக் கனவை கூறு என்றார்கள். நான் அந்தக் கனவைக் கூறினேன். பிறகு உள்ளேயிருந்து உணவு வந்தது. ஹுஸூரும் சாப்பிட்டார்கள். நண்பர்களும் சாப்பிட்டார்கள். ஹஸ்ரத் சாஹிப் சாப்பிட்டு முடிந்ததும் மீதியிருந்த உணவை பரக்கத்திற்காக எங்களுக்கு அவர்கள் பங்கிட்டு வழங்கினார்கள்.

**ஹஸ்ரத் செய்யது ஸைஃபுல்லாஹ் ஸா சாஹிப்** அவர்கள் 1906 ஆம் ஆண்டு பைஅத் செய்தார்கள். 1908 ஆம் ஆண்டு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைச் சந்தித்தார்கள்.

ஸைஃபுல்லாஹ் ஸா சாஹிப் கூறுகின்றார்கள்: எனக்கு ஏறக்குறைய 12 அல்லது 13 வயது இருக்கும். நான் யாடிப்புரா என்ற இடத்தில் இருப்பதை கனவில் கண்டேன். அந்த சமயம் வரை யாடிப்புரா பற்றி எனக்கு தெரியாது. யாடிப்புரா என்ற இடம் எது என்றே அவர்களுக்கு தெரியாது. அவர் கூறுகின்றார்: ஆயிரக்கணக்கான மக்கள் அங்கு ஒன்றுசேர்வதை நான் பார்த்தேன். அங்கு அஹ்மதிகளின் ஒரு பள்ளிவாசல் இருந்தது. அங்கு ஏறக்குறைய 6 அல்லது 7 அடி உயரமுள்ள ஒரு குன்றும் எனக்கு தென்பட்டது. அந்த குன்றின் மீது ஒருவர் அமர்ந்திருந்தார். மக்கள் குன்றுக்கு கீழே நின்றவாறு அவரைப் பார்த்து விட்டு அவருக்கு மரியாதை செலுத்தி விட்டுச் செல்கின்றனர். நான் மக்களிடம் இவர் யார்? என்று கேட்டேன். இவர்கள் ஹஸ்ரத் ரஸுலே கரீம் (ஸல்) அவர்கள் ஆவார்கள். இங்கு அவர்கள் அமர்ந்துள்ளார்கள் என்று என்னிடம் கூறப்பட்டதும் நான் முழு மகிழ்ச்சியுடன் வேகமாக குன்றின் மீது ஏறிச் சென்று அவர்களுக்கு முன்னால் நின்றவாறு அஸ்ஸலாமு அலைக்கும் என்று கூறினேன். ஹுஸூர் அவர்கள் வ அலைக்கும் ஸலாம் என்று கூறினார்கள். பிறகு நான் அவர்களுக்கு அருகில் சென்று அவர்களுக்கு முன்னால் அமர்ந்தேன். உடனடியாக எனது உள்ளத்தில் எப்போதும் இருந்த அந்த ஆசை நினைவிற்கு வந்தது. எனக்கு இவர்களை விட வேறு எந்த பீர் மற்றும் வழிகாட்டியின் தேவை இருக்கின்றது? இவர்களிடமே நான் பைஅத் செயவேன் என்று எனது உள்ளத்தில் கூறிக் கொண்டேன். நான் அவர்களிடம் ஹஸ்ரத் அவர்களே! நான் உங்களிடம் பைஅத் செய்ய விரும்புகின்றேன் என்று கூறினேன். அதற்கு ஹுஸூர் நல்லது; உங்களது கையை நீட்டுங்கள் என்றார்கள். நான் கையை நீட்டியதும் ஹுஸூர் அவர்கள் எனது

வலக்கையை தமது அருளுக்குரிய வலக்கையால் பிடித்தார்கள். பிறகு அல்லாஹு ரப்பி என்று கூறு என்றார்கள். நான் அல்லாஹு ரப்பி என்று கூறினேன். இந்நிலையில் நான் விழித்தெழுந்தேன். நான் ரஸுலே கரீம் (ஸல்) அவர்களை ஸியாரத் செய்து கொண்டிருந்தேன். ஆனால் அந்தோ! நான் விரைவாக விழித்தெழுந்து விட்டேனே என்று நான் வருந்தினேன். அதற்குப் பிறகு அந்த தூய வடிவம் எப்போதும் எனக்கு முன்னால் வந்து கொண்டே இருந்தது. அந்த ஒளிமயமான முகத்தின் பிம்பமானது எனது உள்ளத்தின் ஆழத்திலிருந்தும் ஒருபோதும் அழிந்து போகவில்லை. அந்த தோற்றம் எனது உள்ளத்தில் பதிந்து விட்டது. இந்தக் கனவுக்கான விளக்கம் பிறகு தெரிந்து விடும் என்று இவர் எழுதுகின்றார்.

ஸைஃபுல்லாஹ் ஸா சாஹிப் கூறுகின்றார்கள்: பிறகு ஒரு நீண்ட காலம் கழிந்தது. அக்காலக்கட்டத்தின் பல்வேறு நிலைமைகளை இவர்கள் கூறியுள்ளார்கள். இறுதியில் இவர்களுக்கு காதியானுக்குச் செல்வதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது. அங்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை இவர்கள் பார்த்தார்கள்.

ஸைஃபுல்லாஹ் ஸா சாஹிப் கூறுகின்றார்கள்: எனது பார்வை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது அருளுக்குரிய முகத்தில் விழுந்ததும் எனக்கு கனவில் நான் கண்ட அதே தோற்றம் நினைவில் வந்தது. முற்றிலும் நான் கூறிய கனவில் கண்ட ரஸுலே கரீம் (ஸல்) அவர்களது அதே தோற்றத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை நான் பார்த்தேன். சிறிதளவு கூட அதில் எவ்வித வித்தியாசமும் இருக்கவில்லை.

**ஹஸ்ரத் சவுத்ரி குலாம் முஹம்மது கான் சாஹிப்** அவர்கள் 1908 ஆம் ஆண்டு மே மாதம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைச் சந்தித்தார்கள். ஆனால் அப்போது பைஅத் செய்யவில்லை. 1909 ஆம் ஆண்டில் ஹஸ்ரத் முதல் கலீஃபாவிடம் இவர்கள் பைஅத் செய்தார்கள்.

அவர் கூறுகின்றார்: 1905 ஆம் ஆண்டில் வெப்ப காலத்தில் நான் ஜலந்தர் மாவட்டத்திலுள்ள ராவான் என்ற இடத்திலுள்ள முனிசிபல் போர்டு பள்ளியில் எட்டாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தேன். ஓர் இரவில் நான் கனவு பார்த்தேன். நானும் அப்துல்லாஹ் என்ற பெயரிலுள்ள இன்னொரு சிறுவனான எனது வகுப்பு தோழனும் விளையாட்டு மைதானத்திலிருந்து அதாவது உடற்பயிற்சி செய்யும் மைதானத்திலிருந்து எங்களது தங்கும் இடத்தை போர்டிங் ஹவுஸிற்கு மாற்றிக் கொண்டோம். அது நகரின் பெரிய பஜாருக்குப் பக்கத்தில் இருந்தது. அங்கு நாங்கள் வந்து கொண்டிருந்தோம். அந்த மைதானம் நகருக்கு வடக்குத் திசையில் இருந்ததால் நாங்கள் நகருக்குள் அதன் வடக்குப் பக்கத்தின் வழியாக நுழைய இருந்தோம். அப்போது அந்தத் தெருவில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் தெரிந்தார்கள். அவர்கள் பார்வை நகரின் பக்கம் இருந்தது. நான் நகரின் பக்கம் எனது முதுகை வைத்தவாறும் எனது பார்வையை வடக்கு நோக்கி வைத்தவாறும் ஹுஸுர் (ஸல்) அவர்கள் பக்கம் சென்றேன். அஸ்ஸலாமு அலைக்கும் என்று கூறினேன். இரண்டு கைகளாலும் அவர்களை முஸாபா செய்தேன். ஹுஸுர் அவர்களது தலையில் மிகவும் எளிமையான முறையில் வெள்ளை தலைப்பாகை கட்டப்பட்டிருந்தது. கருப்பு நிறத்திலுள்ள நீளமான மேலங்கியையும் வெள்ளை பைஜாமாவையும் அவர்கள் அணிந்திருந்தார்கள். கோதுமை நிறத்தில் இருந்தார்கள். முடி நீளமாக இருந்தது. கண்கள் பாதி மூடியிருந்தன. நெற்றி விரிவானதாக இருந்தது. மூக்கு பெரிதாகவும் நீளமானதாகவும் இருந்தது. தாடியும் முடிகளும் நீளமானதாகவும் கருப்பாகவும் இருந்தன. முகத்தில் எந்த சுருக்கமும் இருக்கவில்லை. மாறாக அது அழகாகவும் ஒளிமயமானதாகவும் பிரகாசமானதாகவும் இருந்தது. உயரம் நடுத்தரமானதாக இருந்தது. கனவில் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களைச் சந்தித்த பிறகு உள்ளம் இன்பத்தையும் ஆனந்தத்தையும் பெற்றது. உள்ளம் மிகுந்த மகிழ்ச்சியில் திளைத்திருந்தது. எதுவரை என்றால் விழித்தெழுந்த பிறகும் கூட அதே இன்பமும் ஆனந்தமும் இருந்தது. கனவு உள்ளத்தில் எந்த அளவு ஆழமாக பதிந்து விட்டது என்றால் இன்று இந்த வரிகளை எழுதும்போதும் கூட இந்த தூய காட்சியின் மூலம் இன்பத்தையும் ஆனந்தத்தையம் நான் அடைகின்றேன். மேலும் அது உள்ளத்திலிருந்து அழிந்து போவது சாத்தியமற்ற ஒன்றாகும். அஹ்மதிய்யத்தைப் பற்றி தப்லீக் ஏற்கனவே எனக்கு செய்யப்பட்டிருந்தது.

இவருக்கு தப்லீக் செய்யப்பட்டிருந்தது. ஆனால் இவர் அஹ்மதியாகாமல் இருந்தார். கூறுகின்றார்: அஹ்மதிய்யத்தைப் பற்றிய தப்லீக் எனக்கு செய்யப்பட்டிருந்தது. நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள்

மீது ஈமான் கொண்டிருந்தேன். சில சோதனைகளில் கூட இந்த நம்பிக்கையில் நான் நிலைத்திருந்தேன். (அதாவது இவர் பைஅத் செய்திருந்தார்.) கூறுகின்றார்கள்: பிறகு சில காரணங்களால் மீண்டும் நான் எதிரியானேன்.

முதலில் இவர் பைஅத் செய்திருந்தார். பிறகு இவர் முர்தத் ஆனார். எதிரியாகி விட்டார்.

கூறுகின்றார்கள்: இந்தக் கனவுக்கு இரண்டரை வருடங்கள் கழிந்த பிறகு, 1908 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் தேதி லாஹுரில் வைத்து முதன்முறையாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைப் பார்த்த போது, உடனடியாக நான் இப்போது எழுதியுள்ள இந்தக் கனவு எனக்கு நினைவில் வந்தது. இப்போது நான் எந்த நபரை முஹம்மது ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களாக பார்த்தேனோ முற்றிலும் அந்த நபர் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானியாக எனக்கு தென்படுகின்றார். இருவரது அங்க அடையாளங்களும் ஆடையும் முற்றிலும் ஒன்றுபோல் இருக்கின்றது. அதில் சிறிதளவு கூட வித்தியாசம் இருக்கவில்லை. அதே கோதுமை நிறம். அதே நீளமான முடி. அதே கருப்புநிற மேலங்கி. அதே வெண்ணிற பைஜாமா. சுருக்கமாக, முற்றிலும் நான் கனவில் முஹம்மது ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களாகக் கண்ட அதே நபர்தான் அங்கு இருந்தார். எனது வகுப்புத் தோழரான அப்துல்லாஹ்விற்குப் பதிலாக என்னுடன் சவுத்ரி அப்துல்லாஹ் சாஹிப் அஹ்மதி காட்கடி ஓய்வு பெற்ற போஸ்ட் மாஸ்டர் அவர்கள் இருந்தார். அவர்கள் முஸாபா செய்து கொள்ளுங்கள் என்று சைகை மூலம் எனக்கு தெரிவித்தார்கள். நான் அவரது கட்டளைகளுக்கு செவிசாய்த்தவாறு வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் அஸ்ஸலாமு அலைக்கும் என்று கூறினேன். பிறகு வ அலைக்கும் ஸலாம் என்று அவர்கள் கூறிய பதிலை நான் கேட்டேன். எனக்கும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கும் இடையில் சிலர் அமர்ந்திருந்தனர். இதன் காரணமாக நான் எழுந்து நின்று ஹுஸுர் (ஸல்) அவர்களை முஸாபா செய்வதற்காக எனது கையை நீட்டிய போது அது ஹுஸுர் வரை எட்டவில்லை. பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது முழங்கால்களில் நின்றவாறு முஸாபா செய்வதற்கான நற்பேற்றை எனக்கு வழங்கினார்கள். அஸ்ஸலாமு அலைக்கும் என்று நான் கூற, அவர்கள் வ அலைக்கும் ஸலாம் என்று கூறியது முஸாபா செய்த சமயத்தில் தான் நடந்தது.

முகல் சாஹிப் என்று அழைக்கப்பட்ட **மியான் அப்துல் அஸீஸ் சாஹிப்** அவர்கள் கூறுகின்றார்கள்:

மிர்ஸா அய்யூப் பேக் சாஹிப் அவர்கள் காலையில் என்னிடம் வந்து அப்துல் அஸீஸ், அப்துல் அஸீஸ் என்று அழைத்தார்கள். நான் கீழே இறங்கி வந்தேன். எனது கனவை கேள் என்று அவர்கள் கூறினார்கள். பிறகு கூறினார்கள்: நான் இதை ஏன் கூற வந்தேன் என்றால் ஃபஜ்ர் தொழுகையை நான் தொழுது கொண்டிருந்த போது எனது நிலைமை மாறி விட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிகவும் வேகமாக வருவதை நான் பார்த்தேன். எனது அருகில் வந்து அவர்கள் நின்றார்கள். நான் அவர்களிடம் யா ரஸுலல்லாஹ்! தாங்கள் எங்கு செல்கின்றீர்கள்? என்று கேட்டேன். அதற்கு அவர்கள் மிர்ஸா குலாம் அஹ்மதின் பாதுகாப்பிற்காக காதியான் செல்கின்றேன் என்று கூறினார்கள். மிர்ஸா அய்யூப் பேக் அவர்கள் இன்று மாலை காதியானில் என்ன நடக்கின்றது? என்பது இறைவனுக்குத் தான் தெரியும் என்று கூறினார்கள். மாலையில் லேக்ராம் கொலை செய்யப்பட்டதற்குப் பிறகு அது தொடர்பாக ஹஸ்ரத் சாஹிபின் வீடு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது தெரிய வந்தது. அதற்காக போலீஸ் அவர்களது வீட்டிற்கு வந்திருந்தது. இது இவர்களுக்கு முதலில் தெரியாது. ஆனால் கனவு மூலமாக அல்லாஹ் இந்த மக்களுக்கு முதலிலேயே அது பற்றி தெரிவித்து விட்டான்.

**ஹஸ்ரத் செய்யது முஹம்மது சா சாஹிப் அறிவிக்கின்றார்கள்:**

எந்த நாட்களில் லேக்ராமின் கொலை தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது வீடு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதோ அப்போது நாங்கள் இங்கு லாஹுரில் லங்கே மண்டி என்ற இடத்தில் உள்ள பள்ளிவாசலில் மிர்ஸா அய்யூப் பேக் சாஹிபிற்கு பின்னால் சுபுஹ் தொழுகையைத் தொழுது கொண்டிருந்தோம். மர்ஹும் மிர்ஸா சாஹிபின் வயது அப்போது 17 அல்லது 18 ஆக இருந்தது. இவர் மிக நல்ல இளைஞராக இருந்தார். மிர்ஸா அய்யூப் பேக் சாஹிப் அவர்களை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களும் மிகவும் புகழ்ந்து கூறியுள்ளார்கள்.

அறிவிப்பாளர் கூறுகின்றார்: ஸலாம் கொடுத்த பிறகு அவர்கள் நான் ஸஜ்தாவில் ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்களைப் பார்த்தேன். அப்போது அவர்கள் இராணுவ உடையில் இருந்தார்கள். கையில் வாள் இருந்தது.

அவர்கள் விரைந்து சென்று கொண்டிருந்தார்கள். நான் அவர்களிடம் ஹுஸுர் என்ன விசயம்? என்று கேட்டேன். அதற்கு அவர்கள் இன்று மிர்ஸா குலாம் அஹ்மது பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றார். நான் அவரது பாதுகாப்பிற்காக காதியான் செல்கின்றேன் என்று கூறினார்கள்.

**ஹஸ்ரத் அமீர் கான் சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்:**

1915 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் தேதி நான் அரசர்கள் அஹ்மதிகளைப் பார்த்து இப்போது நாங்கள் அரசாட்சி செய்ய முடியாது. அரசாட்சியை நாங்கள் அஹ்மதிகளுக்கு வழங்குகின்றோம். ஆனால் அஹ்மதிகள் முதலில் தப்லீக் மூலமாக பொதுமக்களை தங்கள் கருத்தை ஏற்றுக் கொள்பவர்களாக மாற்ற வேண்டும்.

இது நிபந்தனையாகும். கூறுகின்றார்கள்: பிறகு இந்த பணி எளிதாகி விடும். இதன் அடிப்படையில் நான் கனவிலேயே நான் ஒரு இந்துக்கள் வாழ்கின்ற கிராமத்திற்குச் சென்று தப்லீக் செய்வதைப் பார்த்தேன். பிறகு அவதார புருசர்களின் நிலைமைகளையும் தண்டனை இறங்குவதற்கான காரணத்தையும் எடுத்துக் கூறினேன். பிறகு உருவகமாக அவர்களிடம் இவ்வாறு கூறினேன். பாருங்கள்! கிருஷ்ணன் (அலை) அவர்களது காலத்தில் எத்தகு அபாயம் நிறைந்த போர்கள் நடந்தன? மேலும் தண்டனையும் இறங்கியது என்று கூறினேன்.

இந்த விசயம் இன்றும் நிலைத்திருக்கும் விசயமாகும். அரசாங்கங்கள் கிடைக்க வேண்டும் என்றால் வெற்றிகள் கிடைக்க வேண்டும் என்றால் அது தப்லீக் மூலமாகவும் துஆக்களின் மூலமாகவும் தான் கிடைக்கும்.

**ஹஸ்ரத் டாக்டர் முஹம்மது துபைல் கான் சாஹிப் (ரலி) அவர்கள்** 1896 ஆம் ஆண்டில் பைஅத் செய்தவராவார்.

ஜங்கே முகத்தஸ் என்ற விவாதம் அமிர்தசரஸில் வைத்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் இடையில் எழுத்து வடிவிலான விவாதமாக நடந்தது. எனது மதிப்பிற்குரிய தந்தையார் அவர்களிடத்தில் ஒரு பெருங்கூட்டம் வந்து ஒவ்வொரு நாளும் இதைப் பற்றி பேசினர். இந்த விவாவத்தின் முடிவில் ஹுஸுர் அவர்கள் அப்துல்லாஹ் ஆத்தம் தொடர்பாக ஒரு முன்னறிவிப்பை செய்திருந்தார்கள். இந்த முன்னறிவிப்பில் நிர்ணயிக்கப்பட்டிருந்த காலக்கெடு முடிவடைவதற்கு ஒன்றிரண்டு நாட்களே எஞ்சியிருந்தன. எதிரிகள் இவையெல்லாம் ஏமாற்று வேலைகளாகும் என்று கூற ஆரம்பித்தனர். டிபுடி ஆத்தம் போன்ற பிறர் மீது ஆதிக்கம் செலுத்தும் ஒரு நபர், தனது பாதுகாப்பிற்காக தேவையான எல்லா பொருள்களையும் மிகவும் எளிதாக கிடைக்கும்படி செய்யும் நபர், போலீஸின் ஒரு படையை தனது பாதுகாப்பிற்காக வைத்திருக்கும் நபர் எவரது சூழ்ச்சிக்கு பலியாக முடியும்? இதைக் கேட்டு விட்டு எனது தந்தையாருக்கு இப்படிப்பட்ட விசயங்களைக் கேட்பது மிகவும் வெறுக்கத்தக்கதாக இருந்தது. இந்த நபர்களது எள்ளிநகையாடும் பரிகாசம் நிறைந்த சொற்களைக் கேட்டு விட்டு எனது தந்தையார் முன்னறிவிப்பில் நிர்ணயிக்கப்பட்டுள்ள காலக்கெடு முடிவடைவதற்கு முன்பே அதுபற்றி ஒரு கருத்தைக் கூறுவது மிகவும் தரக்குறைவான செயலாகும். இஸ்லாத்தின் வெற்றியின் அடையாளமாக இந்த முன்னறிவிப்பு அதன் அசல் வடிவில் நிறைவேறாத வரை அந்த நாளில் சூரியன் அஸ்தமிக்காது என்பதில் எங்களுக்கு உறுதியான நம்பிக்கை இருக்கின்றது என்று கூறினார்கள். நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவில் ஒருநாள் மட்டும் எஞ்சியிருந்த தருணத்தில் ஆத்தம் உயிருடன் இருக்கின்றார் என்ற செய்தி வந்து சேர்ந்தது.

கூறுகின்றார்கள்: இந்த செய்தியைக் கேட்டு எனது தந்தையாரின் அமைதியின்மை மேலும் அதிகரித்தது. மிகவும் அதிகமாகி விட்டது. எந்த முன்னறிவிப்பு இஸ்லாத்தின் வெற்றியின் அடையாளமாக செய்யப்பட்டதோ அது நிறைவேறாமல் இருப்பதை அவர்களால் சகித்துக் கொள்ள முடியவில்லை. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது எதிரிகள் மகிழ்ச்சியுடன் இருந்தார்கள். ஆனால் எனது தந்தையாரின் உள்ளம் துக்கத்தின் ஒரு மலையைச் சுமந்து கொண்டிருந்தது. அவர்கள் துஆக்கள் செய்ய ஆரம்பித்தார்கள். அதே நாளில் இரவில் கருணைமிக்க ஞானமிக்க இறைவன் கனவில் அவர்களுக்கு ஒரு காட்சியைக் காட்டினான். அவர்கள் என்ன பார்த்தார்கள் என்றால், ஒரு வடிவத்தை அவர்கள் பார்க்கின்றார்கள். அது பார்ப்பதற்கு மனிதன் போல் தெரிகிறது. அந்த மனிதனின் முகத்தில் குறிப்பாகவும் உடலில் மற்ற பகுதிகளில் பொதுவாகவும் அதிகமாக புல்லும் தூசியும்

புழுதியும் படிந்திருக்கின்றது. அந்த மனிதரின் முகத்தைப் பார்க்கவே முடியவில்லை. உடலின் மற்ற பகுதிகளின் மூலமாக கூட அவரை அடையாளம் கண்டு கொள்வது சாத்தியமற்றதாக ஆகி விட்டது. இன்னொரு நபர் அங்கு இருக்கின்றார். அவரது முதுகு எனது தந்தையாரின் பக்கம் இருக்கின்றது. அவரது முகம் இந்த தூசி மற்றும் புழுதியால் மூடப்பட்டிருக்கும். அந்த நபரின் பக்கம் இருக்கின்றது. அந்த நபர் மிகுந்த எச்சரிக்கையுடனும் உழைத்தவாறு மிகுந்த நேசத்துடன் அந்த மனிதர் மீது படிந்துள்ள புல்களையும் இலைகளையும் தனது கைகளால் ஒன்றன்பின் ஒன்றாக அகற்றுகின்றார். சிறிது நேரத்திற்குப் பிறகு இந்த எல்லா புல்களையும் இலைகளையும் அவர் எடுத்து எறிந்து விடுகின்றார். மேலும் தூசி படிந்த புழுதி படிந்த நிலையிலிருந்த அவரது உடலை சுத்தப்படுத்துகின்றார். அந்த இலை போன்றவை முற்றிலும் அகற்றப்பட்டு அவை கீழே விழுந்தவுடன் அதன் கீழே இருந்து சூரியனைப் போன்ற எத்தகைய ஒளிமயமான முகம் வெளிப்பட்டது என்றால் அதை பார்ப்பதற்கான சக்தி கண்களுக்கு இல்லை. அந்த சமயத்தில் கனவிலேயே இந்த விசயம் அவர்களுக்குப் புரிகிறது. எந்த தூய மனிதரது உடலிலிருந்து புல்கள், இலைகள் போன்றவை அகற்றப்பட்டதோ அந்த மனிதர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஆவார்கள். அந்த புல்களையும் இலைகளையும் அகற்றும் நபர் செய்யதுனா ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் ஆவார்கள்.

இரவில் தந்தையார் இந்தக் காட்சியைப் பார்த்தார்கள். காலையில் மீண்டும் எதிரிகள் ஒன்றுதிரண்டு அவர்களிடம் வந்தனர். அவர்களிடம் பாருங்கள்! நேற்று நீங்கள் என்ன கூறினீர்கள்? ஆத்தம் உயிருடன் இருக்கின்றார். அவர் மரணிக்கவில்லை என்பதும் மிர்ஸாவின் முன்னறிவிப்பு பொய் என்று நிரூபிக்கப்பட்டு விட்டது என்பதும் உங்களுக்குத் தெரியாதா? என்று கேட்டார்கள். எனது தந்தையார் உங்களுக்கு கிடைத்த செய்தி தவறானது. ஆத்தம் நிச்சயமாக உயிருடன் இருக்கமாட்டார். அவ்வாறு உயிருடன் இருந்தாலும் தனது உறவினர்கள் மற்றும் தனது மார்க்க சகோதரர்கள் மத்தியில் நிச்சயமாக அவர் இறந்து விட்டார். அவர் இந்த விசயங்களிலிருந்து தவ்பா செய்யாமல் இருந்தாலும் கூட மீண்டும் அதைப் பற்றி அவர் எதுவுமே பேசவில்லை. எதுவரை எல்லா விசயங்களின் உண்மை நிலை தெரிய வருவதில்லையோ அதுவரை நீங்கள் உங்களது சந்தேகங்களை இறைவனிடம் ஒப்படைத்து விடுங்கள். இரவில் நான் கண்ட அதே காட்சியை நீங்களும் கண்டிருந்தால் பிறகு உங்களுக்கு இதுபற்றி தெரிந்திருக்கும். எந்த நபருக்கு எதிராக நீங்கள் விசத்தைக் கக்குகின்றீர்களோ அவர் எவ்வளவு உயர் தகுதியில் உள்ள மனிதராக இருக்கின்றார்?

நான் எப்போது கனவில் இந்தக் காட்சியைப் பார்த்தேனோ அப்போதிருந்தே எனது உள்ளத்தில் இந்த அடையாளம் எவ்வகையில் நிறைவேறும் என்றால் அது உலகிற்கு தனது மகிமையை வெளிப்படுத்திக் காட்டும் என்ற உறுதி ஏற்பட்டிருக்கின்றது. இதற்குப் பிறகும் கூட மிர்ஸா சாஹிப் அவர்கள் மூலமாக நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான அடையாளங்கள் வெளிப்படும். அது இஸ்லாத்தின் எதிரிகள் ஏற்படுத்தியிருக்கின்ற எல்லா தடைகளையும் தகர்த்தெரிந்து விடும் என்று எனது தந்தையார் அவர்களிடம் கூறினார்கள். எனவே இஸ்லாத்தின் அழகிய போதனைகளை வெளிப்படுத்திக் காட்டுவது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது உண்மையான முகத்தை பிறருக்கு காட்டுவது, அவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள எல்லா குற்றச்சாட்டுகளையும் அகற்றுவது ஆகியவை தான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களது பணியாகும். பாருங்கள்! அப்துல்லாஹ் ஆத்தமுடன் நடந்த விவாதத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் இஸ்லாத்தையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களையும் தற்காப்பதில் தான் ஈடுபட்டிருந்தார்கள். முஸ்லிம்கள் என்று தம்மை கூறிக் கொள்கின்ற சிலரும் அவர்களது ஆலிம்களும் கூட இவ்விசயத்தில் மற்றவர்களுடன் இணைந்து செயல்பட்டனர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் இஸ்லாத்தின் உண்மையை வெளிப்படுத்த விரும்புகின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது அழகான முகத்தை பிறருக்குக் காட்ட விரும்புகின்றார்கள். இந்த மக்களோ அவர்களை எதிர்க்கின்றனர். இன்று இவர்கள் பெரும் ஊர்வலங்களை நடத்துகின்றார்கள். மீலாது நபியின் மகிழ்ச்சியை கொண்டாடுகின்றனர். ஆனால் உண்மையான மகிழ்ச்சி விழாக்களைக் கொண்டாடுவதில் இருக்க முடியாது. மாறாக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது தூதுச் செய்தியை உலகில் பரப்புவதில்தான் அந்த மகிழ்ச்சி இருக்கின்றது. இஸ்லாத்தின் அழகிய போதனையை உலகிலுள்ள ஒவ்வொரு நபர் வரையிலும் எட்ட வைப்பதில் தான் அந்த மகிழ்ச்சி இருக்கின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது தரூது ஓதுவதில் அந்த மகிழ்ச்சி இருக்கின்றது.

முதலில் நான் ஒரு மேற்கோளைப் படித்தேன். மார்க்கத்தில் ஆற்றலை உருவாக்க வேண்டும். உண்மையான முஸ்லிமாக ஒருவர் இருக்கின்றார் என்றால் மார்க்கத்தில் ஆற்றலை உருவாக்குவது அவரது பணியாக இருக்க வேண்டும். அந்தப் பணியை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது இந்த உண்மைப் பேரன்பருடன் இணைந்து செயல்படுவது மூலமாகவே செய்ய முடியும். ஆதம் மரணிப்பதிலிருந்தும் தப்பித்தாலும் ஒரு வகையில் பார்க்கும் போது அவர் தவ்பா செய்திருந்தார். அவர் ஏற்கனவே கூறிய சொற்களை மீண்டும் கூறுவதிலிருந்தும் விலகி விட்டார். அவ்வாறு கூறும்படி கூறுவதை அவர் ஆட்சேபணை செய்தார். இதற்குப் பிறகு சில மாதங்கள் கழிந்த பிறகு அவரது மரணம் நிகழ்ந்தது. சிறிது காலத்திற்காக மரணம் தள்ளிப் போகலாம். ஆனால் கண்டிப்பாக அது நிகழும் என்ற முன்னறிவிப்பு இருந்தது. அவ்வாறே அது நிகழ்ந்தது.

நான் ஏற்கனவே கூறியது போன்று, கனவில் கண்ட ஒரு காட்சியை விவரித்துக் கூறியது போன்று அரசாங்கங்கள் கிடைக்க வேண்டுமென்றால் வெற்றியைப் பெறவேண்டுமென்றால் அதை தப்லீக் மூலமாகத்தான் நாம் செய்ய முடியும். இதற்காக நாம் முயற்சி செய்வது அவசியமானதாகும். இன்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைத் தவிர வேறு எவராலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது அழகான முகத்தை பிறருக்குக் காட்ட முடியாது. இவ்வாறு காட்டக்கூடிய எவரும் இல்லை. இதுவே ஜமாஅத்தின் பணியாகும். எனவே இதன் பக்கம் நாம் கவனம் செலுத்த வேண்டும்.

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

நான் எப்போதும் வியப்பான பார்வையுடன் பார்க்கின்றேன். இந்த அரபி நபி – அவரது பெயர் முஹம்மது (ஸல்) ஆகும். எவ்வளவு மேலான தகுதியுள்ள நபியாக இருக்கின்றார்? அவர் மீது ஆயிரக்கணக்கான தரூதும் ஸலாமும் இருக்கட்டும். அவர்களுடைய மேலான தகுதியின் இறுதி எல்லையை நாம் அறிய முடியாது. அவர்களது தூய்மைப்படுத்தும் ஆற்றலின் தாக்கத்தைத கணிப்பது மனிதனின் வேலையல்ல. வேதனை என்னவென்றால் இவ்வளவு உயர்வான தகுதியில் அவர்கள் இருந்தும் கூட அவர்கள் அடையாளம் கண்டுகொள்ளப்படும் விதத்தில் அடையாளம் கண்டு கொள்ளப்படவில்லை. உலகில் தொலைந்து போன அந்த ஏகத்துவத்தை அந்தவொரு வீரர் தான் மீண்டும் இந்த உலகில் கொண்டு வந்தார். அவர்கள் இறைவன் மீது அளவு கடந்த நேசத்தை வைத்திருந்தார்கள். மனித இனத்திடம் அளவு கடந்த அனுதாபத்துடன் நடந்து கொள்வதில் அவர்களது உயிர் கரைந்தது. எனவே அவர்களது உள்ளத்தின் இரகசியத்தை அறிந்திருந்த இறைவன் அனைத்து நபிமார்கள், எல்லா முன்னவர்கள் மற்றும் பின்னவர்கள் ஆகியோர் மீது அவர்களுக்கு சிறப்பை வழங்கினான். அவர்களது ஆசைகளை அவர்களது வாழ்நாளில் நிறைவேற்றித் தந்தான். அவர்களே ஒவ்வொரு அருளின் தலையூற்றாக இருக்கின்றார்கள். எந்த நபர் இதனை ஏற்றுக் கொள்ளாமலும் அவர்களிடமிருந்து அருளைப் பெறாமலும் எந்தவொரு சிறப்பை தான் பெற்றதாக வாதம் செய்கின்றாரோ அவர் மனிதரல்ல. மாறாக அவர் சய்த்தானின் சந்ததியாவார். ஏனென்றால், ஒவ்வொரு சிறப்பான திறவுகோலும், அவருக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. ஒவ்வொரு இறைஞானத்தின் கரூவூலமும் அவருக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. எவர் அவர் மூலமாக எதையும் பெறுவதில்லையோ அவர் நிரந்தரமாக புறக்கணிக்கப்பட்டவராவார். நாம் என்ன பொருள்? நமது உண்மை நிலை என்ன? உண்மையான தவ்ஹீதை நாம் அந்த நபியின் மூலமாகவே பெற்றோம் என்பதை நாம் ஏற்றுக் கொள்ளாமல் இருந்தால் நாம் அருட்கொடைகளை மறுத்தவர்களாக ஆகி விடுவோம். உயிருள்ள இறைவனை இந்த முழுமை பெற்ற நபியின் மூலமாகவும் அவரது ஒளியின் மூலமாகவும் நாம் அடையாளம் கண்டு கொண்டோம். இறைவனுடன் உரையாடுகின்ற நற்பேற்றை – அதன் மூலமாக நாம் அந்த இறைவனின் முகத்தைக் காண முடியும். அதனை இந்த கண்ணியமிக்க நபியின் மூலமாகவே நாம் பெற்றோம். நேர்வழியின் சூரியனின் இந்த கதிர்கள் வெயிலைப் போன்று நம்மீது படிகின்றது. நாம் அதற்கு முன்னால் நிற்கும் வரை நாம் ஒளிமயமானவர்களாக ஆக முடியும். அந்த மனிதர் எல்லாரையும் விட முழுமை பெற்றவராகவும் முழுமை பெற்ற மனிதரகவும் இருந்தார். முழுமை பெற்ற நபியாக இருந்தார். அவர் முழுமையான அருள்களுடன் வந்தார். அதன் காரணமாக ஆன்மீகமாக எழுப்பப்படுதல், ஒன்றுதிரட்டப்படுதல் ஆகியவற்றின் காரணமாக உலகில் முதல் கியாமத் வெளிப்பட்டது. மரணித்துப் போன ஒரு உலகம் அவரது வருகையால் உயிர் பெற்றது. அந்த அருளுக்குரிய நபி ஹஸ்ரத் காத்தமுல் அன்பியா

இமாமுல் அஸ்வியா கதமுல் முர்ஸலீன் ஃபஹ்ருன் நபிய்யீன் ஜனாபே முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் ஆவார்கள். எங்கள் இறைவா! நீ உலகம் தோன்றிய நாள் முதல் இதுவரை யார் மீதும் வழங்கிராத அளவு இந்த நபியின் மீது நீ அருளையும் கருணையையும் இறக்குவாயாக! அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் வ அலா ஆலி முஹம்மத்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது இத்தகைய உயர்வான தகுதியைத்தான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் விளக்கிக் கூறியுள்ளார்கள். இதன் காரணமாகத்தான் மக்கள் பல்வேறு கனவுகளை பார்க்கும் போது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது வடிவத்தில் கண்டுள்ளனர். அவ்விருவரும் ஈருடல் ஓருயிராக ஆகி விட்டனர். நாம் இன்றும் எப்போதும் நமது நாவுகளை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது தரூது ஓதுவன் மூலம் ஈரமாக வைத்திருக்க வேண்டும். இதில் முன்னேறிக் கொண்டே செல்ல வேண்டும். இவ்வாறே அவர்களது முன்மாதிரியைப் பின்பற்றுபவர்களாக இருக்க வேண்டும். இதில் எப்போதும் முன்னேறிச் செல்பவர்களாக இருக்க வேண்டும்.

நான் கூறியதுபோன்று இன்று பெரிய அளவில் மாநாடுகள் நடக்கின்றன. ஊர்வலங்கள் நடக்கின்றன. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது பிறந்த தினம் கொண்டாடப்படுகிறது. ஆனால் அங்கு அவர்களது போதனைகளை கூறப்படுவதில்லை. ரப்வாவில் இப்போது நடக்கின்ற ஊர்வலங்களில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏசிப் பேசுவதை தவிர வேறு எதுவும் நடக்காது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது வாழ்க்கை பற்றி எதுவும் கூறமாட்டார்கள். முழுக்க முழுக்க ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏசிப் பேசுவது மட்டுமே இருக்கும். ஜமாஅத்திற்கு எதிராக மிக அசுத்தமான சொற்களைக் கூறிக் கொண்டிருப்பார்கள். உலகவாதிகளாக ஆகிவிட்ட இவர்கள் நடந்து கொள்ளும் விதம் இவ்வாறாகத்தான் இருக்கின்றது. முஸ்லிம்கள் என்று தங்களை கூறிக் கொண்டு இஸ்லாத்தை விட்டும் இவர் வெகுதூரம் விலகிச் சென்று விட்டனர். மறுபுறம் அல்லாஹ் சஹாபாக்களுடன் நடந்து கொண்ட விதம் எவ்வாறிருந்தது என்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மூலமாக அல்லாஹ் வெளிப்படுத்திக் காட்டுகின்றான். அதன் மூலம் அவர்களை திருப்தி அடையும்படி செய்கின்றான். இன்றும் கூட உலகில் பல்வேறு பகுதிகளில் அல்லாஹ் இதுபோன்ற காட்சிகளை நல்லியல்பு கொண்ட நற்பாக்கியம் பெற்ற மக்களுக்கு காட்டுகின்றான். அதன் மூலமாக அவர்கள் ஜமாஅத்தை ஏற்றுக் கொள்கின்றனர். ஜமாஅத்தில் இணைந்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் பைஅத்தில் வந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது உண்மையான அடிமைகளாக இருப்பதை ஏற்றுக் கொள்கின்றனர்.

எதிரிகளாக இருக்கும் இந்த மக்களது கண்களை அல்லாஹ் திறப்பானாக! இவர்கள் பெயர் தாங்கி முஸ்லிம்களாக தங்களை கூறிக்கொள்வதற்குப் பதிலாக உண்மையான முஸ்லிம்களாக ஆக வேண்டும். மேலும் இறைவனின் குரலைக் கேட்பவர்களாக அவர்கள் ஆக வேண்டும்.

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**

**HAZRATH KHALIFATUL MASIH V**

at BAIT-UL-FUTUH MOSQUE, London.

on **25.01.2013**

Translated by : Maulavi M. RAFEEQ AHMAD H.A.

Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456